நகரசபையா? மாட்டுச் சந்தையா?

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆடி மீ 11உ திங்கள் (26—7—54)
வெளியூர்: ஆடி மீ 12உ செவ்வாய் (27—7—54)

மலர்: 2
இதழ்: 36

பொறுக்குக்குழு தேர்வில் வாதப் பிரதிவாதம்

தேர்தலில் தோற்றவர்களுக்கு சலுகை காட்டும் சதி

கல்கத்தா நகரசபை தலைவர் மீது எதிர்கட்சியினர் குற்றச்சாட்டு

கல்கத்தா, ஜூலை 23— பல்வேறுபட்ட ஸ்தாபன பொறுக்குக் குழுவிற்கு, வேறு சிறப்பு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக, கல்கத்தா கார்ப்பொரேஷன் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

சிறப்பு உறுப்பினர் சேர்க்கும் பிரேரணையை சபைமுன் பிரேரிப்பதற்கு முன்னதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் மூலம் பிரேரணையை ஒத்திப் போட வேண்டுமென்று பிரேரேபித்தார்.

வாக்கெடுப்பில் பிரேரணை தோல்வியுற்றது. மறுமுறையும் அதே எதிர்க்கட்சி உறுப்பினர் ஒவ்வொரு ஸ்தாபன பொறுக்குக் குழுவிற்கும் மூன்று மூன்று சிறப்பு உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார்.

இந்த கூட்டத்தில், உறுப்பினர்கள் மேஜையைக் குத்தி சத்தம் செய்தும், காங்கிரஸ் கட்சி—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி இழிவாகத் தாக்கிக் கூச்சலிட்டுக் கொண்டும் இருந்தனர்.

ஸ்தாபன பொறுக்குக் குழுவிற்கு, கார்ப்பொரேஷன் உறுப்பினர்கள் அல்லாத சிறப்பு உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ளப்படும் சிறப்பு உறுப்பினர்கள் சிற்சில துறைகளில் விஷயஞானம் உடையவர்களாக இருக்க வேண்டியது கட்டாயமாக இருக்க, காங்கிரஸ் கட்சியினர் சேர்க்க விரும்பும் உறுப்பினர்களில் சிலர் சென்ற தேர்தலில் தோற்றுப் போனவர்களாகவும், எந்த ஒரு விஷயத்திலும் புலமையற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்றும், இப்படி தோற்றவர்களுக்கு, இத்தகைய புறவழியாக கார்ப்பொரேஷன் குழுவுகளில் இடம் தர முற்படுவது வேண்டுமென்றே வாக்காளர்களுக்கு இழைக்கும் அநீதியாகும் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினரான சென்சர்மா என்பவர் குறிப்பிட்டார்.

சேர்த்துக் கொள்ளவேண்டுமென காங்கிரஸ் உறுப்பினர்கள் கருதும் சில நபர்களுடன் மேயருக்கு தொழில் உறவு இருக்கிறது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இக் குற்றச்சாட்டைக் 'கேளுங்கள்' 'கேளுங்கள்' என எதிர்கட்சி உறுப்பினர்கள் ஆரவாரம் செய்தனர். இதைகண்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் 'ஒழுங்கு' 'ஒழுங்கு' என உரத்து ஒலமிட்டனர்.

எத்தனைமுறை மணியடித்த போதிலும், உறுப்பினர்களிடை ஒழுங்கை நிலைநாட்ட செய்ய முடியவில்லை மேயரால். மூன்றரைமணிநேரம் மாட்டுச் சந்தையாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது, கல்கத்தா கார்ப்பொரேஷன் கூட்டம்.

படித்த பார்ப்பனர்களுக்கு அண்ணாவின் அன்பழைப்பு!

"கால மாறுதலைக் கவனிக்காத பார்ப்பனர்கள் பலர் உள்ளனர்"

"ஆச்சாரியார், சி. பி. அய்யர் காலத்தை மகான்—ரிஷிகள் காலமாகக் கருதுகின்றனர்"

"இங்கிலாந்திலே அய்யர் உண்டா? ஜெர்மனியிலே அய்யங்கார் உண்டா?"

'சாதிச் சனியன்கள் தொலைய படித்த பார்ப்பன வாலிபர் பாடுபட வேண்டும்'

"நாட்டில் பார்ப்பனர்கள் மீது பகைமை உணர்வு வளர்ந்திருக்கிறது. வளர்ந்துகொண்டே இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்ன?

"பார்ப்பனர்களிலே இன்றும் பலர் கால மாறுதல்களைக் கவனிக்காதவர்களாகவே இருக்கிறார்கள். மகரிஷிகளினுடையவும் மகான்களுடையவும் காலம் போன்றே ஆச்சாரியாருடையவும், சி. பி. ராமசாமி அய்யருடையவும் காலத்தை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் அது தவறு. இன்று ஏற்பட்டுள்ள கால மாறுதல்களுக்குத் தகுந்த முறையில் தங்களை மாற்றிக்கொள்ள அவர்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் நாட்டில் பார்ப்பனர் மீது வளர்ந்து வரும் பகைமை உணர்வு குறையுமே தவிர, திராவிட இயக்கங்களை, தங்கள் பத்திரிகை பலத்தால் அழித்துவிடலாம் என எண்ணுவதால், பகைமை உணர்வு குறையாது"

"தி. மு. கழகம் அழித்துவிடப்பட முடியாத ஒரு மக்களின் விடுதலை இயக்கம். மகத்தான மக்கள் சக்தியாக விளங்குகிற தி. மு. க. எப்படி வளர்ந்தது? அடுக்குச் சொற்களாலா? அல்லது நம் சொல்லும் உபமானங்களாலா? கிடையாது. மக்களின் விடுதலை உணர்வால் வளர்க்கப்பட்டிருக்கிறது தி. மு. கழகம்.

"தங்களை அடக்கி ஆளும் ஆதிக்கக்காரர்களிடமிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற துடிப்பு, மிகச் சாதாரண மானவர்களான எங்களையும் மற்ற மக்களையும் போரிடத் தூண்டுகிறது. இன்று ஆயிரம் கிளைகளையும், சர்க்கார் கணக்குப்படி லட்சம் அங்கத்தினர்களையும் கொண்ட கழகத்தின் மகத்தான மக்கள் சக்தி பொறுப்பற்ற முறையில் தவறான வழியில் ஈடுபடுத்தப்படவும் முடியும். ஆனால் தி. மு. கழகம் அப்படிப் பொறுப்பற்ற காரியங்களைச் செய்யாது. விடுதலை வேட்கையுடன் விழிப்புணர்வு பெற்றிருக்கும் மக்களுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டிய மாபெரும் பொறுப்பு தி. மு. கழகத்திற்கு இருக்கிறது,

'சமுதாயத் துறையில் தி. மு. கழகம் விடுதலையை விரும்புகிறது. இன்று இருக்கிற சமுதாய அமைப்பு சரி என்று எந்த படித்தவராவது கூற முடியுமா?

"சீரழிந்து சின்னாபின்னமாகிக் கிடக்கிற சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டுமென்பதிலே தி. மு. கழகம் அக்கறை காட்டுகிறது.

"சமுதாயத்திலே நிலவுகிற சாதிபேதங்கள், அவைகளைக் கற்பிக்கும் வர்ணாஸ்ரம தர்மங்கள், வர்ணாசிரமங்களுக்கு மூலமாக விளங்கும் புராண இதிகாசங்கள், இவைகளுக்கு மூலமாக இருக்கும் வேதங்கள், அவைகளை இயற்றியதாகச் சொல்லப்படும் ரிஷிகள், அவர்களின் சந்ததியினர் எனக் கூறிக்கொள்ளும் பார்ப்பனர்கள்—இப்படியாக சமுதாயம் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்று நிலவுகிற சாதிபேதங்கள் தொலைய, அவைகளின் மூலாதாரங்கள் அழிக்கப்பட்டாக வேண்டுமே! சமுதாயத்தில் ஒற்றுமை காண, சாதிபேதங்கள் தொலைய வேண்டாமா?

"இன்னமும் தங்களை உயர்ந்தவர்கள் என்று பார்ப்பனர்கள் கூறிக்கொண்டிருந்தால் எப்படி சாதிகள் தொலைய முடியும்? ஒற்றுமை வளர முடியும்? எனவேதான், வழக்கம் போல நான் சொல்கிறேன், இந்த உண்மையைப் பார்ப்பனர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று.

"பார்ப்பனர்களுக்குச் சாதிகள் அழிவதிலே விருப்பமில்லாவிட்டால், எப்படி அவர்கள் மீது பகைமை உணர்வு வளராமலிருக்க முடியும்?

"இப்படிப் பேசுவதை வகுப்புத் துவேஷம் என்று சொல்லுவதற்கோ, 153 செக்ஷன்களைக் காட்டி பயமுறுத்துவதற்கோ தி. மு. கழகம் அஞ்சிவிடாது. இந்த பயத்தை எல்லாம் தி. மு. கழகம் தாண்டிவிட்டது.

—என்று, 25—7—54 ஞாயிறு அன்று மாலை 6-மணிக்கு சென்னை (44-வது வட்டம்) மயிலாப்பூர் தி. மு. கழகச் சார்பில், கபாலீசுவரர் கோவில் சன்னதித் தெருவில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதாக விளம்பரம் செய்திருந்த தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் கூட்டத்திற்கு வர சற்று தாமதம் ஏற்பட்டமையினால், தோழர் டி. சண்முகம், எம். எல். ஏ அவர்கள் தலைமை ஏற்று, சிறிது நேரம் உரையாற்றினார், தோழர் வி. என் கோவிந்தராசன் பேசியதும், தோழர் அனிபா கழகப் பண் இசைத்தார். அடுத்து தோழர் அ பொன்னம்பலனார் அவர்கள் சமுதாயத் துறையில் தி. மு. கழகத்தின் பணி குறித்து விளக்கமாகப் பேசியதும் தோழியர் பி. எஸ். செல்லம் இன்னிசை வழங்கினார். அடுத்து பெருத்த மகிழ்வு ஆரவாரம் பேரொலிகளுக்கிடையே தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கருத்துரை வழங்கினார். அவரது ஒன்றரை மணி நேரச் சொற்பொழிவும், 'பார்ப்பனச் சேரி'யான மயிலாப்பூரில், அதுவும் அந்த மயிலையின் 'மகத்துவமான' கபாலி கோயில் சன்னதி முன் நடைபெற்றது—'அவர்கள்' நம்மைப் புரிந்துகொள்ள பெரும் அளவு பயன்படும் என்பதில் தவறில்லை. கூட்டத்தில் மடிசஞ்சிகைப் பார்ப்பனர்களும், அவர்தம் பத்தமித்திரர்களும் ஏராளமாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட அக்கூட்டத்தில் பெண்களும் மிகுந்த அளவில் கலந்துகொண்டனர்—தமது அருமைக் குழந்தைகளுடன்.

மயிலையே திருவிழாக்கோலம் பூண்டிருந்தது—தி. மு. கழகக் கூட்டத்தால்.

ஒலி, ஒளி ஏற்பாடுகள் உட்பட எல்லாம் சிறப்புற அமைந்திருந்தன. கோவிலைச் சுற்றி பல தெருக்களிலும், கூடியிருந்த எல்லா மக்களும் குறை இன்றி சொற்பொழிவுகளைக் கேட்குமாறு ஒலிபெருக்கி ஏற்பாடுகளை திறம்படச் செய்திருந்த எம். ஆர். எஸ். தோழர்கள் பாராட்டுதலுக்குரியவர்கள்.

மயிலையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டம் தி. மு. கழகத்தின் கொள்கைகள் அப்பகுதியில் படருவதற்கு நல்ல உரமாக அமைந்திருக்கும் என்பது மிகையல்ல.

"மயிலாப்பூர் தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெறுகிற இந்த மாபெரும் பொதுக் கூட்டம் மிக நெருக்கடியான இடத்தில் நடைபெறுகிறது. இந்த வட்டாரத்தில்—இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 26-7-54 திங்கள்

வாஸ்கோடகாமாவின் வழி வந்தோர்......!

மாற்று நாட்டு மண்ணில் ஆதிக்கம் செலுத்த எண்ணுவது தவறு; அது மனித உரிமைகளுக்கும், உலக முன்னேற்றத்திற்கும் கேடு விளைவிக்கக்கூடியது —என்ற உண்மையை உலகின் பெரும் பகுதி மக்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கின்றனர்.

என்றாலும், ஏகாதிபத்தியங்கள் உலகப் படத்திலிருந்து மறைவதற்கு முன்னர், தனது முழு பலத்தையும் கடைசி முறையாகக் கையாண்டு பார்ப்பது வழக்கமான செய்கை.

ஆசிய நாடுகளிலே ஆதிக்கம் செலுத்தி, மக்களைச் சுரண்டி வாழும் எண்ணத்தால் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் செய்த கொடுமைகள் ஏராளம். எவ்வளவு கொடுமைகளைப் புரிந்தாலும், நாட்டுக்கு உரியவர்கள் விழித்துக்கொண்டால், ஏகாதிபத்திய அரசுகள் நிலைக்காது என்ற சரித உண்மையை ஆசியாவிலே வேரூன்றியிருந்த பல ஏகாதிபத்தியங்கள் உணர்ந்துகொண்டன.

இந்தியாவில் மட்டும், பிரெஞ்சு ஏகாதிபத்தியமும், போர்ச்சுகல் அரசும் சிறு சிறு பகுதிகளை தங்களின் ஆதிக்கத்தின் கைத்தாக் கொண்டு வெளியேற மறுக்கின்றன.

அன்னியர்களின் பிடியிலிருந்து விலகுவோம்; தாயகமான இந்திய உப கண்டத்துடன் இணைந்து வாழ்வோம்; —என்ற முழக்கம், பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் கேட்ட வண்ணமிருக்கின்றன. பிரெஞ்சிந்தியாவில் விடுதலை சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. பல பகுதிகள் தங்கள் சொந்த உழைப்பால் விடுதலை பெற்றுவிட்டன

மாஹியிலிருந்து பிரெஞ்சு சர்க்கார் வெளியேறி பட்டேறிய அறப்பட்டுப் போய் விட்டது,

இப்போது, கோவா, டையு, டாமன் என்ற மூன்று போர்ச்சுக்கிசிய இந்தியப் பகுதிகளில் டாமனில் உள்ள டாட்ரா என்னும் கிராமம் விடுதலை பெற்றுவிட்டது என்று செய்திகள் கிடைத்திருக்கின்றன

விடுதலைக் கிளர்ச்சியை அடக்க ஏகாதிபத்தியங்கள் கையாளும் அத்தனை முறைகளையும் போர்ச்சுக்கிசிய அரசாங்கம் கோவா மக்கள்மீது வீசி வருகிறது.

ஆப்பிரிக்கத் துருப்புகள் கப்பலில் வந்து இறங்கியிருக்கிறார்கள்.

விடுதலை வீரர்களைக் கைது செய்து நாடு கடத்தியிருக்கிறார்கள்

பிறந்த நாட்டின் மேன்மைக்காக உழைக்கும் தோழர்களைப் புல்லர்கள் என்றும் கூலிகள் என்றும், போர்ச்சுகல் அதிகாரிகள் வசைமாரி பொழிகிறார்கள்.

இந்தியாவுக்கு வழி கண்டு பிடிக்கிறேன் என்று அலைகடலிலே, அனாதைகளாய் பாய்மரக் கப்பல்களில் வந்தனர் இந்தப் போர்ச்சுகிசியர்கள். வழி தேடி வந்த வாஸ்கோட காமாவின் வழிவந்தோர், நாடு தங்களுடையது என்று வாதிடுகின்றனர். டாட்ரா கிராமத்தை, 35 விடுதலைத் தொண்டர்கள் விடுவித்துக் கொண்டனர் என்றதும், இந்திய சர்க்காரின்மீது லிஸ்பன் சர்க்கார் சீறிப்பாய்கிறது ஐ. நா. சபைக்குச் செல்வேன் என்று கொக்கரிக்கிறது.

இந்தியாவில், லிஸ்பன் சர்க்காரை விட, எத்தனையோ வலிமை மிக்க ஏகாதிபத்தியமான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், ஆட்சி செலுத்தியது: நிலைமை உணர்ந்துகொண்ட ஆங்கிலேயர்கள் கொள்கையை மாற்றிக்கொண்டனர்.

ஏழரை ஆண்டுகளாக ஒரு லட்சம் துருப்புகளைப் பலியிட்டும் போர் நடத்திய பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இந்தோ-சீனாவில் எப்படியாவது போரை நிறுத்தினால் போதும் என்ற எண்ணத்தில் சமாதானம் செய்துகொண்டுவிட்டது.

ஆசிய மக்கள் காலனி ஆதிக்கத்தை வெறுக்கிறார்கள் விரட்டியடிக்கிறார்கள் என்பதை உணர்ந்துகொண்ட மேற்கத்திய ஏகாதிபத்தியங்களில் சில தங்கள் போக்கை மாற்றிக்கொண்டன

இந்தியாவில் மட்டும் இந்த அன்னியத் திட்டுக்களில் ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்தியங்கள் வெளியேற மறுப்பது மட்டும் விந்தையாக இருக்கிறது.

நூற்றாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த மக்கள் மனதிலே விடுதலை கிளர்ச்சி எழும்பிவிட்டது கோவா, புதுவை போன்ற இடங்களிலெல்லாம் அன்னிய ஏகாதிபத்தியங்களை எதிர்த்து புரட்சிப் படை தயாராகிவிட்டது

அந்த நேரத்தில் நாடு மேன்மையுற இந்திய உபகண்டத்துடன் இணைவதுதான் நேர்மை என்று கூறுவோரை பிரெஞ்சுப் போலீசாரும், போர்ச்சுக்கல் போலீசாரும் இராணுவ உதவியுடன் தாக்கி வருகின்றனர்.

அடக்குமுறைகளைத் தாங்கிக் கொண்டு, டாமனில் கோவா தொண்டர் படையினர் டாட்ரா கிராமத்தை விடுவித்திருக்கிறார்கள் என்பதே, போர்ச்சுக்கிசிய சாசகங்களை மக்கள் விரும்பவில்லை என்பதற்குச் சான்றாகும்.

போர்ச்சுக்கிசிய சர்க்கார் கோவா, டையூ, டாமன் என்ற மூன்று பகுதிகளிலும் ஆயிரம் துருப்புகளை வைத்துக் கொண்டு மக்களை மிரட்டி வருகின்றனர்.

படை பலமும், பணபலமும் விடுதலைக் கிளர்ச்சியை அடக்கிவிடாது. அது போலவே அடக்குமுறை ஏகாதிபத்தியத்தை என்றுமே பாதுகாத்துவிடாது. இதைப் போர்ச்சுக்கிசிய சர்க்கார் உணரும் என்று நம்புகிறோம்.

காலதாமதம் செய்யாது இந்தியாவில் உள்ள அன்னிய ஏகாதிபத்தியங்கள் வெளியேறி விடுவதுதான் நாகரிகமாகும்.

இதுநாள்வரை மக்களின் வாழ்வைச் சிதைத்து லாப வேட்டை ஆடியது போதும் என்ற எண்ணத்தில் போர்ச்சுக்கிசிய அரசு தனது ஆட்சியை முடித்துக் கொள்வது அவர்களுக்கு நன்மை பயக்கும்.

உரிமையில்லாத பகுதிகளில் இருந்துகொண்டு நாட்டு மக்களைச் சுட்டுத் தள்ளப் போகிறேன், புரட்சிப் படையினர்மீது குண்டு வீசப் போகிறேன், ஆனால் படை செல்லப் பாதையில்லையே, ஆகவே இந்திய வழியாகப் போர்ச்சுக்கிசியப் படைகள் டாட்ரா கிராமத்திற்குச் செல்ல அனுமதியுங்கள் என்று இந்திய சர்க்காரைக் கோருவது விந்தையல்ல, விபரீதமான போக்காகும்.

உலக சக்திகளின் போக்கை போர்ச்சுக்கிசிய ஏகாதிபத்தியம் உணரவேண்டும். தங்களுக்கும் காலனி நாடுகள் இருக்கின்றன என்ற வீண் பெருமையைக் காப்பாற்ற லிஸ்பன் சர்க்கார் எண்ணுமானால் அது தவறு, நிறைவேற முடியாத எண்ணமாகும்

வலிமை மிக்க வல்லரசுகள் பல ஆசிய நாடுகளின் முன்னே தலை வணங்கும் காலம் இது.

என்றைக்கோ எப்போதோ சந்தர்ப்ப வசத்தாலும், சாகசச் செயல்களாலும் கிடைத்த இந்தியப் பகுதிகளை விட்டுப் போக மறுப்பது பொல்லாங்கு விளைவிப்பது என்பதை லிஸ்பனில் உள்ள அரசியல்வாதிகள் உணரும் காலம் அண்மையிலே இருக்கிறது என்பதை கூறிக்கொள்கிறோம்.

கோவா, டையூ, டாமன் பகுதிகளில் அரும்பியுள்ள விடுதலைக் கிளர்ச்சி போர்ச்சுகிசிய ஏகாதிபத்தியத்திற்கு தக்க பாடம் கற்பிக்கும் முறையில் வளர்ந்து வருகிறது என கருதுகிறோம். அந்த வளர்ச்சியின் அறிகுறிதான் டாட்ரா மீட்சி.

உண்மை உள்ளமும் விடுதலை எழுச்சியும் கொண்ட மக்கள் என்றுமே தோல்வி கண்டது கிடையாது என்ற சரித உண்மை, இந்த மக்களுக்கு வெற்றியைத் தேடித்தர ஊக்கமளிக்கும் என்று நம்புகிறோம்.

கீழ்பவானி அணைக்கட்டு

கோவை, ஜூலை 23—

பத்து கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு, இரண்டு லட்சத்து ஏழாயிரம் ஏகர் நிலங்களுக்கு பயன் அளிக்கக் கூடிய கீழ் பவானி அணைக்கட்டின் வேலைகள் முடிவு அடைந்துவிட்டன என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

40,000 ஏக்கருக்கு முதல் தடவையாக இந்த அணையிலிருந்து தண்ணீர் விடப்படவுள்ளதாம். செப்டம்பர் இறுதிக்குள் 1 லட்சம் ஏகர் நிலங்கள் பாசனத்திற்கு கொண்டுவரப்படும் என்று தெரிகிறது.

தென்னிந்தியாவில் முடிவு பெற்ற திட்டங்களில் இதுதான முக்கியமாகும் என்று கூறப்படுகிறது.

எகிப்திய கேடுகளுக்கு வெள்ளையரே காரணம்!

—— (:) ——

அன்னிய ஆக்கிரமிப்பின் அழிவு வேலைகள்!

எகிப்திய பிரதமர் நாசர் கருத்து!

கெய்ரோ, ஜூலை 23—

"எகிப்தின் எல்லாக் கேடுகளுக்கும் மூலகாரணம், பிரிட்டன் சூயஸ்கால்வாய் பிரதேசத்தை விடாப்பிடியாக ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதே."

—என்று, எகிப்திய பிரதமர் கர்னல் அப்டெல் நாசர் குறிப்பிட்டார்.

ராணுவப் புரட்சியின் வருடாந்திரக் கூட்டமொன்றில் பேசுகையில் அவர் மேலும் "வெளிநாட்டு ஆக்ரமிப்பு நமது தொழில் வளத்தைக் குறைத்து விட்டிருக்கிறது, ராணுவத்தில் பலக் குறைவை உண்டுபண்ணியுள்ளது; நமது கப்பற்படையை அழித்துவிட்டது, நாம் ஒரு சுதந்திர நாடு என்னும் கௌரவத்தைக்கூட மறந்துவிட்டிருக்கிறது" என்று கூறினார் அவர் தனது உரையில் சூயஸ் தகராறு பற்றி தற்போது நடைபெறும் ஆங்கிலோ-எகிப்திய பேச்சுவார்த்தைகள் பற்றி ஒரு வார்த்தையும் குறிப்பிடாதது அந்தப் பேச்சு வார்த்தைகளில் இதுவரையில் எந்த ஒரு உருப்படியான முடிவும் மேற்கொள்ளப்படவில்லை. என்பதை உறுதிப்படுத்துகிறது என்று கருதப்படுகிறது,

மத்திய கிழக்கு நிலைகள் பற்றி நாசர் குறிப்பிடுகையில், இஸ்ரேல் எல்லைப்புறங்களில் தனது தாக்குதல்களை நிறுத்திவிட்டு, ஐ. நா. வின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடந்தாலன்றி, நிலைமை மிகக் கொந்தளிப்புள்ளதாக மாறும் என்று மேற்கு வல்லரசுகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அத்தகைய ஒரு கொந்தளிப்பு, அரபிய உலகத்திற்கு ஏற்படுகிற நஷ்டத்தைக் காட்டிலும், இஸ்ரேலுக்கு இன்று ஆதரவு தந்து வருபவர்களுக்கும், அதனிடம் பொறுமை காட்டி வருபவர்களுக்கும் அதிகமான பெருத்த நஷ்டத்தைத் தாக்கும் என்றும் நாசர் குறிப்பிட்டார்.

நேபாளத்தை விழுங்க இந்தியா சதி?

நேபாள செலாவணி தேய்வுக்கு இந்தியாவே காரணமாம்

காட்மண்டு, ஜூலை 21—

நேபாளச் செலாவணியின் மதிப்பு வரவரக் குறைவதற்கு இந்தியாவும் ஒருகாரணம் என்று ஆலோசனை சபையில் குறை சொல்லப்படுகிறது.

தோழர் கே. பி. தாண்டன் என்பவர் கொண்டுவந்த ஒரு அதிகாரப் பற்றற்ற தீர்மானத்தின் மீது பேசுகையில் தோழர் கே. பி. தாப்பா என்ற எதிர்க்கட்சி உறுப்பினர் நேபாள செலாவணி தேய்ந்து வருவதை ஆராய ஒரு விசாரணைக்குழு நியமிக்கவேண்டுமென்று கோரினார்.

இப்பொழுது 170 நேபாள ரூபாய்க்கு 100 இந்திய ரூபாய்கள் மதிப்புத் தரப்படுகிறது.

தோழர் தாப்பா மேலும் பேசுகையில், நேபாள செலாவணி முழு மதிப்புடன் விளங்க இந்திய நாணயப் புழக்கம் நேபாளத்திலுள் தடுக்கப்படவேண்டும் என்றும் அவ்வாறு செய்தால் தான் நேபாள செலாவணி அழிந்துபடுவதிலிருந்தும் காக்கப் பட முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இப்போது, நேபாளப் பிரதேசத்தின் முக்கால் பகுதியில் இந்திய நாணயமே சட்டரீதியான புழக்கத்தில் இருக்கிறது.

தோழர் தாப்பா மேலும் குறிப்பிட்டார்.

"இந்தியா, காஷ்மீரைப் போன்றே, நேபாளத்தையும் இந்திய ஒரு பொருளாதார அமைப்பு அங்கமாக ஆக்க எண்ணியுள்ளது என சந்தேகிக்கிறேன்"

விசாரணைக் குழு நியமிக்கவேண்டும் எனும் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாம். அந்தக்குழு மூன்றே மாதங்களில் தனது அறிக்கையைத் தயாரிக்கும் என்று தெரிகிறது.

குதிரை லாயங்கள் பூங்காக்களாக மாறும்!

பம்பாய் நகரசபையின் ரூ. 1 கோடி திட்டம்

பம்பாய், ஜூலை 23—

பம்பாய் நகரத்தில் உள்ள குதிரை லாயங்கள் அனைத்தையும் பார்க்குகளாகவும், அழகிய தோட்டங்களாகவும் மாற்ற பம்பாய் நகரசபை திட்டமிடுகிறதாம்.

பம்பாய் சமூக நலக் குழுவின் கூட்டமொன்றில் பேசிய தோட்டங்களின் அதிகாரியான ஜே. ஐ. அசம்தி என்பவர் கூறினார்.

இத்திட்டம் நிறைவேற ஒரு கோடி ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது.

சியான் கோட்டையில் தொங்கும் தோட்டமொன்று அமைக்க பம்பாய் நகரப் பொருள் இலாகாவினர் முயற்சி செய்கின்றனர் என்று தெரிகிறது.

நகரின் மத்தியில் உள்ள திறந்த வெளி மைதானங்கள், மருத்துவ மனைகளை விட நல்ல பலனை அளிக்கும் தன்மை உடையன மருத்துவ மனைகள் குணப்படுத்தும் நோய்களை பலவற்றை, பார்க்குகளும், தோட்டங்களும் வரவொட்டாமல் தடுத்துவிடுகின்றன என்று அசம்தி கூறினார்.

மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ள பம்பாய் போன்ற நகரங்களில் உள்ள திறந்த வெளிகளும் பொதுப் பூங்காக்களும் நகரின் இருதயம் போன்றவை என்று அவர் மேலும் கூறினார்.

டாக்டர் ரகுவீராவுடன் பேட்டி :

திராவிடரின் சுதந்திரக் கோரிக்கை!

—(:)—

"வெறுப்பு உணர்வினால்தான் எழுந்தது"

டாக்டர் ரகுவீரா

"ஆளப்படுபவர்களுக்கு அடக்கி ஆள்பவர்மீது வெறுப்பு ஏற்படுவது இயற்கைதானே?

—நமது நிருபர்

டாக்டர் ரகுவீரா அவர்களுடன் நமது 'நம் நாடு' நிருபர் 22—7—54 அன்று கவர்னர் மாளிகையில் சந்தித்து நடத்திய உரையாடலின் தொடர்ச்சி கீழே தரப்படுகிறது:—

ர. வீ.:- அதெல்லாம் ஒன்றுமில்லை. எங்களுக்கு இந்தியன் என்ற உணர்வுதான் இருக்கிறது. இந்தியாவெங்கும் இந்த ஒற்றுமை நிலவுவதைக் காண முடியும் நம்மிடையே நீண்ட காலமாக நிலவி வருகிற கலாச்சார ஒற்றுமை இருக்கிறது.........

ந. நி:- சற்று நில்லுங்கள், இந்தியாவில் கலாச்சார ஒற்றுமை எங்கே இருக்கிறது? காசியில் உள்ள விஸ்வநாதர் ஆலயம், பூரியில் உள்ள ஜகந்நாதர் ஆலயம், திரு—கொச்சியில் உள்ள பத்மநாபசாமி ஆலயம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருப்பதி வெங்கடேஸ்வரர் கோவில் இவைகள் அத்தனையையும் ஒருங்கே ஒருமுறை பார்ப்பவர்களுக்கு ஒரு பெரும் உண்மை புலப்படும். அந்த உண்மை என்னவென்றால், வடநாட்டில் உள்ள இந்த ஆலயங்களில் உள்ள சிற்ப, சித்திரக் கலைக்கும், தென்னாட்டில் உள்ள சிற்ப சித்திரக் கலைக்கும் பெரும் வேறுபாடு நிலவுகிறது என்பதுதான்.

ர. வீ.: ஒரே பொருள் பல் வேறு வகையான திறமைகளால், வேறுபட்ட எண்ணங்களால் வெளிப்படுத்தப்படுகிறது அவ்வளவுதான் அந்த வேற்றுமைக்குக் காரணம்.

ந. நி: பொருள் ஒன்று; சம்மதிக்கிறேன். அந்தப் பொருளை எண்ணிப்பார்க்கும் திறமையும், முறையும் வேறு வேறு இல்லையா?

ர. வீ: ஆமாம்.

ந. நி.: அப்படியானால், இந்த எண்ணிப்பார்க்கும் திறனில் வேறுபாடு இருந்தாலும் பொருள் ஒன்றாய் இருந்தால் ஒற்றுமை இருப்பதாகக் கொள்ள வேண்டுமென்கிறீர்கள்; அது எப்படிச் சரியாகும்? ஐரோப்பாவில் மட்டுமின்றி, ஆசியாவிலும் கிருஸ்தவ மதம் பரவி இருக்கிறது. அதனாலேயே, ஆசியாக்காரர்களும், ஐரோப்பாக்காரர்களும் ஒன்றாகி விடுவார்களா?

ர. வீ: அதெப்படி?

ந. நி:— அது எப்படி, வேறுபட்டவர்களோ அதேபோலத்தான், தென்னாட்டவரும், வடநாட்டவரும், ஒரே மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருக்கலாம் அந்தத் துறையை எண்ணிப் பார்க்கிற முறையும் திறனும் வேறு வேறாகக் கொண்டிருப்பதால் வேறுபட்டவர்கள் என்று நாம் சொல்கிறோம். இது மட்டுமின்றி கண்ணுக்கு வெளிப்படையாகத் தெரிகிற வேறுபாடுகள் பல உள்ளன. தென்னாட்டவரின் உண்ணல், உடுத்தல் எல்லாம் வேறு வேறு.....

ர. வீ:— இதோ பாருங்கள் என் மனைவி, டீ சாப்பிடுவதுண்டு நான் சாப்பிடுவதில்லை நான் உடையணிவதில் பலவகைகளைக் கையாளுபவன். இந்த உணவு உண்பதையும் உடுத்துவதையும் வேறுபாடெனக் கருதி மக்களைப் பிரித்துப் பார்க்கக் கூடாது.

ந. நி.: பின் ஒரு நாட்டு மக்களையும் இன்னொரு நாட்டு மக்களையும் பிரித்துக் காட்டுகிற அடையாளங்கள்தான் என்ன? வெள்ளைக்காரன் வேற்று நாட்டவன் என்பதை அவன் பேசுகிற மொழி அணியும் உடை பாவனை, நாகரிகம் இவை தவிர, சீதோஷ்ண நிலைக்கும் அவனது நாட்டின் வளத்திற்கும் தகுந்த நிலையில் கிடைக்கிற உடற்கட்டும் தவிர வேறெது அவனை நம்மிலிருந்து பிரித்துக் காட்டுகிறது இதைக்கொண்டே வடநாட்டவரும், தென்னாட்டவரும் வேறு வேறு மக்கள் என்பது அவர்களது வெளித்தோற்றங்களாலேயே தெரிய வருமே!

ர. வீ: உங்களை நாங்கள் அப்படி வேறுபடுத்திப்பார்க்கவில்லை

ந. நி: வேறுபடுத்திப்பார்க்கவில்லை என்பதினாலேயே வேறுபாடு இல்லையென்று சொல்வதற்கில்லையல்லவா?

ர. வீ.: வேறுபடுத்திப்பார்க்க வேண்டும் என்கிற அவசியம் இருப்பதாக நான் கொள்ளவில்லை. எங்கள் பகுதிகளிலே எத்தனையோ ஆயிரம் தென்னிந்தியர்கள் வேலை பார்க்கின்றனர் நான் அவர்களை வேற்று மனிதர் என்றே எண்ணவில்லை. எங்கள் மீது ஆதிக்கம் கொள்வதாகவும் நினைக்கவில்லை.

ந. நி.: இங்கிருந்து அங்கு குடியேறி வேலை பார்ப்பவர்கள், இந்த நாட்டில் வாழ வழியற்று அங்கு குடியேறி இருக்கலாம் பலர் உத்தியோகம் பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம், உங்கள் நாட்டு மக்களின் வாழ்வையும் வளத்தையும் சுரண்டுபவர்களாக இல்லை; மேலும் உங்களுக்கு திறமையான நிர்வாகம் செய்ய உத்தியோகஸ்தர்கள் கிடைக்காததால் எங்கள் பகுதியினரை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றும் சொல்லலாம். இங்கு நிலைமை அப்படி அல்லவே, மார்வாரியும் குஜராத்தியும் வட்டிக்கடையிலிருந்து பெரும் மூலதனம் போட்டு தொழில் நடத்துபவர்களாக இருக்கிறார்கள் சுரண்டிக் கொண்டு செல்கிறார்கள்.

ரகுவீரரின் காரியதரிசி குறுக்கிட்டு:—" அப்படி உங்கள் பகுதியில் தொழில் நடத்துபவர்களை நீங்கள் வரவேற்கவல்லவா வேண்டும். உங்களுக்குப் பொருளாதாரம் தெரியாது போலும். வேறு பலர் உங்கள் பகுதியில் தொழில் செய்வதின் மூலம் உங்கள் நாடு தொழில் மயமாகிறது உங்கள் மக்களுக்கு வேலை கிடைக்கிறது. அதற்காக நீங்கள் நன்றி செலுத்த வேண்டியிருக்க ஆதிக்கம் செலுத்துவதாகச் சொல்லுகிறீர்களே!

ந. நி.: நண்பரே, நான் ஒரு பொருளாதார நிபுணன் அல்ல ஒத்துக் கொள்கிறேன். ஆனால் உங்களை ஒன்று கேட்கிறேன் அன்று வெள்ளையனின் துணிகளைக் கொளுத்தியதற்கு என்ன காரணம் காட்டினீர்கள் காங்கிரசார்?

காரியதரிசி: வெள்ளையன் வேற்று நாட்டான்.

ந. நி.: அதையேதான் நாங்கள் சொல்லுகிறோம், வடவர் எங்களுக்கு வேற்று நாட்டவர் என்று. ஆகவேதான் பொருளாதாரத் துறையில் வடநாட்டவர் கொண்டுள்ள ஆதிக்கமும் தொலைய வேண்டுமென விரும்புகிறோம்.

ர. வீ.: உங்கள் பேச்சினின்று எனக்கு ஒன்று தெரிகிறது. வடநாட்டவர் மீது, உங்களுக்கு ஒருவகையான வெறுப்புணர்வு கற்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த வெறுப்புணர்வின் அடிப்படையில் தான், நான் வேறு, நீ வேறு என்று பிரித்துப் பேசுகிறீர்கள். நம்மிடையே பரஸ்பரம் நல்லெண்ணம் இல்லாவிட்டால் எப்படி?

ந. நி: சுதந்திரம் கோருகிற மக்களுக்கு தங்களை ஆள்பவர்கள் மீது வெறுப்புணர்வு தோன்றுவது இயற்கைதானே?

ர. வீ.: உங்களின் சுதந்திரக் கொள்கை வெறுப்புணர்வின் அடிப்படையில் அமைகிறது. அதனால் அது நியாயமானதல்ல.

ந. நி:— சுதந்திர உணர்வு வெறுப்புணர்வின் அடிப்படையில் எழுந்தால் மக்களுடைய ஆதரவைப் பெற முடியாது என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றுமே! அடக்கி ஆளப்படுபவர்களுக்கு தங்களை அடக்கி ஆள்பவர்கள் மீது ஒருவகை வெறுப்புணர்வு வளர்வது இயற்கை— தவிர்க்க முடியாததும் கூட, என்பதும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியது

ர. வீ:— மக்களின் ஆதரவு உங்கள் கோரிக்கைக்கு கிடைத்திருப்பதாக எனக்கு யாரும் சொல்லவில்லையே. ஒரு குறிப்பிட்ட கட்சியினர்தான் இந்த இயக்கத்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்டேன்.

ந. நி:- நாம் பேசிக் கொண்டிருக்கிற இந்த மாளிகையில் வதிகிற சென்னை கவர்னரே ஒருமுறை குறிப்பிட்டுள்ளார். 'இது இயக்கம் ஒரு சிலரது இயக்கம் என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் இது நாடெங்கும் பரவி இருக்கிற, ஒரு பெரும் மக்கள் இயக்கம்" என்று. இதுவே அத்தாட்சியாக அமையும் எங்கள் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவு எவ்வளவு இருக்கிறது என்பதற்கு.

ர. வீ:- உங்கள் பகுதி மக்கள் தொகை என்ன?

ந. நி:- தமிழகம் மட்டும் இரண்டரைக் கோடி.

ர. வீ:- இவ்வளவு சிறிய பகுதி மக்கள். உலகில் சுதந்திரமாக தனித்து பாதுகாப்புடன் வாழ முடியாது.

மேலும் இப்படி நீங்கள் பிரிந்து போவதால் இந்தியாவின் பெருமையும் கௌரவமும் குறையும், பாழ்பட்டுவிடும்.

ந. நி: உலகில் சிறிய சிறிய நாடுகள் எல்லாம், சில ஆயிரம் மக்களைக் கொண்ட நாடுகளெல்லாம், தனித்து வாழ்வதற்கு எந்த பலத்தை நம்பியிருக்கின்றன. இன்றைய உலகில், ஒரு நாட்டின் பாதுகாப்பு, அந்த நாடு சிறியதானாலும் பெரியதானாலும், அந்த நாட்டின் மக்கள் தொகையையோ, ராணுவத்தையோ, நிலப்பரப்பையோ பொறுத்திருக்கவில்லை. மக்கள் தொகையையும் நிலப்பரப்பையும் கொண்டு ஒரு நாட்டின் பாதுகாப்பை அளவிடுவது மிகப் பழமையான அரசியல் கொள்கை மேலும், இந்தியாவின் பெருமை காக்கப்படுவதற்காக நாடு பிரிக்கப்படக் கூடாதென்றால் எங்கள் பெருமை என்னாவது? உங்களுக்கு, நாங்கள் உங்களுடன் சேர்ந்து வாழ்வதால் பெருமை, லாபம். எங்களுக்கு, நஷ்டம்

உங்கள் லாபத்தை நீங்கள் எண்ணுகிறீர்கள். எங்கள் லாபத்தை நாங்கள் எண்ணக் கூடாதா?

ர. வீ.: நீங்கள் வட நாட்டவர் மீது கொண்டுள்ள வெறுப்பை அடிப்படையாக வைத்து, பிரிவினை கோருகிறீர்கள். அந்தப் பிரிவினை மனப்போக்கை மக்கள் மனதில் நல்லெண்ணத்தை ஊட்டுவதால், போக்கிவிட முடியும் என்று நினைக்கிறேன்.

ந. நி: அந்த நல்லெண்ணம் பிரிவினை சித்திக்கிறவரையில் ஏற்படாது. சுதந்திரத்திற்காக உயிரையும் தியாகம் செய்யும் உள்ள உரத்துடன் திராவிடர்கள் திரண்டு மூண்டு நின்று தங்கள் லட்சியத்தை நடத்திக் கொள்வதை உலகில் எந்த சக்தியும் தடுத்து நிறுத்த முடியாதென்பதை மட்டும் உங்களுக்கு நீங்கள் ஒரு வடநாட்டவராயிருப்பதால் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ர. வீ: ஜனநாயக ரீதியாக இந்த நாட்டு மக்கள் அந்த சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதை யாரும் தடுக்கமாட்டார்கள். அரசியல் சாசனமே அப்படிப் பிரிந்து போவதை அங்கீகரிக்கிறதென்று நினைக்கிறேன். நீங்கள் பிரிந்துபோவதைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். ஆனால்: நாங்கள் உங்களை சகோதரர்கள் என்கிறோம். எங்கள் மீது உங்களுக்கும் அந்த சகோதர உணர்வு, நல்லெண்ணம் வளர்ந்தால் இந்தப் பிரிவினை உணர்வு தலைகாட்டாது என்று நம்புகிறேன். அந்த நல்லெண்ணம் வளர வேண்டுமென விரும்புகிறேன்.

ந. நி: மிகவும் நன்றி; திராவிடர்கள் தங்கள் சுதந்திரத்தை இன்றோ நாளையோ பெறத்தான் போகிறார்கள். அதை மட்டும் கூறி விடைபெறுகிறேன்; உங்கள் மனதைப் புண்படுத்த வேண்டுமென்பதல்ல என் விருப்பம். உள்ள நிலைமை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்ளத்தான் இந்த பேச்சுக்கள் என்று கூறிக் கொள்கிறேன். வணக்கம்.

மேலும் நமது நிருபர் தி.மு. கழகத்தின் சமூக, பொருளாதாரக் கொள்கைகள் குறித்தும், தி. மு. கழகம் மக்களின் மகத்தான சக்தியாக விளங்கி வருவது குறித்தும் சமீபத்திய கடந்த காலத்தில் நடத்திய வீரம் செறிந்த போராட்டங்கள் குறித்தும் பண்டிதரின் 'நான்சென்ஸ்' வசவுகள் பற்றி கழகத்தின் கருத்து என்ன என்பது குறித்தும், நாட்டு மக்கள், பண்டிதரின் போக்கால் கொந்தளித்துப் போர்க்களம் புகுந்த வரலாறு பற்றியும் டாக்டர் ரகுவீர் அவர்களுக்கு எடுத்துக்கூறினார்.

குறிப்பு:—ஆங்கிலத்தில் நடைபெற்ற இந்த விவாதத்தில், 'நம் நாடு' அலுவலகத் தோழர் முகவை ஆர் எஸ் பாண்டியன் நிருபராகச் சென்றிருந்தார்.

—ஆசிரியர்.

திருவள்ளுவர் வாரம்

டாக்டர் மு. வரதராசனார் வேண்டுகோள்

தமிழர் ஒன்றுபட்டு உயர்ந்து விளங்க வேண்டுமானால், அனைவரையும் பிணித்து ஒற்றுமைப் படுத்தவல்ல உரிய ஒரு நூலாக இருப்பது திருக்குறளே. அதை உலகினருக்கு அளித்துப் பெருமிதம் அடைவதற்கு முன், தமிழகத்தார் அனைவரும் அறிந்து போற்றும் பெருநூல் என அடிக்கடி முழங்குதல் வேண்டும். சிறப்பாக இளைஞர்கள், மாணவர்கள் உள்ளங்களில் ஒரு கிளர்ச்சியும், அதை ஒட்டி மற்றவர்களின் உள்ளங்களில் ஒரு மலர்ச்சியும் ஏற்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டே அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டினர் ஜூலை இறுதி வாரம் திருக்குறள் வாரமாக—திருவள்ளுவர் வாரமாக நாடெங்கும் பள்ளிகளிலும், கழகங்களிலும் கொண்டாடுதல் வேண்டும் என்றும், அவ்வாரத்தில் ஒரு நாள் அரசினர் விடுமுறை நாளாகவும் விளங்கவேண்டும் என்றும் நன்முடிவுகள் செய்து வேண்டிக்கொண்டனர். இவ்வேண்டுகோளைத் தமிழகத்து அரசியல் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், குறளன்பர்கள் முதலிய எல்லோரும் ஏற்றுத் தம்மால் இயன்றன எல்லாம் செய்தல் நாட்டின் முன்னேற்றத் திறவுகோலாக திருவள்ளுவரின் பிறந்த நாள் முதலியன எவை ஆயினும் ஆகுக. அவ்வக்காலை விரும்பியவாறு கொண்டாடுவோர் கொண்டாடுக. இது நாட்டின் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் உரிய நல்லதொரு புத்துணர்ச்சியாக விளங்கவேண்டும் என்னும் வேட்கையால் எழுந்த வேண்டுகோளாகும். தனித்தனியே சிதறுண்டு காற்றில் கலந்திடும் போற்றுதல்களும், கூக்குரல்களும் ஆண்டு தோறும் ஒரு வாரத்தில் நாடெங்கும் கேட்கும் முழக்கமாகத் திரண்டு அமைதலால் பெரும் பயன் விளையும் டச்சிகளும், கல்லூரிகளும் தொடங்கிப் புதுமை மிளிரச் செயலாற்றும் காலமாதலால் ஆண்டு தோறும் ஜூலைத் திங்களின் இறுதி வாரமே இவ்வகையில் மிகப் பயன் தருவதாகும் திருவள்ளுவரின் பெயரால் தமிழர் ஒன்றுபட முடியும் என்பதை ஆசிரியர் உலகமும், மாணவர் உலகமும் அரசியல் உலகமும் மெய்ப்பித்துக் காட்டுதற்கு இது ஓர் அரிய வாய்ப்பாகும். ஆதலின தமிழர் அனைவரும் தம்மால் இயன்றது செய்து, திருவள்ளுவரின் பெயரால்,திருக்குறளின் பெயரால் ஒரு வாரத்தில் ஒன்றுபட்ட முழக்கம் செய்து தாய்மொழிக்கும், தாய் நாட்டிற்கும் ஆக்கம் தேடுமாறு வேண்டுகிறேன்.

மு. வரதராசன்,
(தமிழ்த் துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.)

ஹக்கின் அரசியல் துறவறம்!

டாக்கா, ஜூலை 23—

வயோதிகம் காரணமாகக் கிழக்கு வங்க முன்னாள் முதல் அமைச்சர் பஸ்லுல் ஹக், தான் அரசியலிலிருந்து விலகப் போவதாக அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

சொல்லக்கூடாத பலவற்றை தான் சில கோஷ்டிகளின் தன்னை மறந்து சொல்லிவிட்டதாகவும் பாகிஸ்தானிடம் தனக்கு பற்று கிடையாது என்று தோன்றக் கூடிய விதத்தில் கருத்துக்களை வெளியிட்டதற்காக அவர் வருந்துவதாக ஹக் மேலும் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

ஹக் இப்போது வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

கலா நிகழ்ச்சி

28—7—54-ம் தேதியிலிருந்து சித்தனி சுப்ரமணியம் குழுவினரின் மருத்துநீவு கலை நிகழ்ச்சி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும்:—

28—7—54: விளாங்குடி
29—7—54: அவனிக்காடு
30—7—54: ஆலக்காரப்புலம்
31—7—54: கன்னிக்குடி
1—8—54: கட்டிமேடு

பொதுச்செயலாளர் பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இடத்தில் கூட்டம் நடந்த எண்ணியத்தில் கேட்டபோது நான் சற்று தயங்கினேன்; இதைத் தவிர மயிலாப்பூரில் சற்று வசதியான இடம் வேறு இல்லை என்று நண்பர்கள் கூறினர்.

"இந்த இடத்தில் கூட்டம் நடத்துவதற்கு நான் சற்று தயங்கியதற்குக் காரணம் இடம் நெருக்கடியானது என்பது மட்டுமல்ல; 'தண்டகாரண்யத்தில் தவம் புரிந்து கொண்டிருந்த ரிஷிகளிடையே ராட்சசர்கள் புகுந்தது போல், இங்கும் வந்துவிட்டனரே இந்த தி. மு. கழகத்தினர்' என்று சுவாமிகளாய் இப்பகுதியில் வாழும் பார்ப்பனர்கள் எண்ணக் கூடும் என்ற காரணத்தாலும் கூட!

"மயிலாப்பூரில், கபாலி கோவில் சன்னதியில், தி. மு. கழகக் கூட்டம் என்றதுமே எத்தனை பேர் இங்கே கலக்கமடைந்திருப்பார்கள், கவலைப்பட்டிருப்பார்கள்; வகுப்புக் கலவரம் மூளுமோ என அஞ்சி இருப்பார்கள்.

"அவர்களுக்குச் சொல்கிறேன், நாட்டில் பார்ப்பனர் மீது துவேஷ மனப்பான்மை இல்லை என்று சொல்ல முடியாது. பார்ப்பனர்கள் மீது துவேஷ மனப்பான்மை நிலவுகிறது என்ற உண்மையை நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால், தி மு. கழகம் மிகவும் பொறுப்புடைய ஒரு கழகம். வகுப்புக் கலவரத்தை நினைத்தால் மூட்டிவிட முடியாதென்பதல்ல; முடியும் நிச்சயமாக. ஆனால், பொறுப்புள்ள தி. மு. கழகத்தவர் அப்படி எதையும் செய்ய மாட்டார்கள்; புத்தி உள்ள பார்ப்பனர்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். புத்தி உள்ள பார்ப்பனர்கள் என்று நான் குறிப்பிடுவதற்குக் காரணம், பார்ப்பனரிலும் பலர் அறிவை இழந்துவிட்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான்."

பார்ப்பனர்களுக்கு அறிவுரை கூறும் வகையில், மேற்கண்டவாறு குறிப்பிட்ட பொதுச் செயலாளர், மேலும் தொடர்ந்து கூறினார்:—

"சென்ற ஆண்டிலே இதே மாதம் இதே நாளிலே சிறைக்குள்ளே இருந்தோம். அடுத்த ஆண்டிலும் வெளியிலிருப்போம் என்று சொல்வதற்கில்லை. போர்க்களம் புகுந்த வீரன், களத்திலே வீழ்ந்து பட்டான், தான் இறந்து படுவது திண்ணம் என்று உணரும் போது, தன் பின் வருபவனிடம் தனது ஆயுதத்தை ஒப்படைத்துவிட்டுச் சாவான். பின் வருபவன் தொடர்ந்து களம் புகுவான். அதே போன்றுதான் கழகத்தவராகிய நாங்கள் சட்டப் புத்தகங்களின் செக்ஷன்களால் அடக்குமுறைக்கு பலியாக நேர்ந்தால் அடுத்து வருபவரிடம் தொடர்ந்து போரிடச் சொல்லிச் செல்வோம். இன்று தி. மு கழகம் படவேண்டிய கஷ்டங்கள், பெறவேண்டிய சாபங்கள், கேட்டுக் கொள்ள வேண்டிய வசவுகள், அத்தனையையும் அனுபவித்தாயிற்று. மக்களின் விடுதலைப் பணியை உள்ளடக்கிய கழகமாக இருப்பதால் விடுதலை பெறும் வரையில் போரிட்டுத்தான் சாவோம். கேலிப் படங்களாலோ, பத்திரிகை பலத்தாலோ நம்மை அழித்துவிட முடியாது என்பதையும் பார்ப்பன நண்பர்கள் உணரவேண்டும்.

இஸ்லாமியப் பண்பாட்டைக் காட்டி, முஸ்லீம்கள் பெரும்பகுதியினராக வாழும் பிரதேசங்களை ஒரு நாடாகத் தரவேண்டுமென ஜின்னா கேட்டார். பாகிஸ்தான் பகற்கனவு என எத்தனை பேர் மறைசாற்றினார்கள். நிபுணர்கள் நிகண்டு எழுதினார்கள்? என்றாலும் முடிவு என்ன ஆயிற்று? கஸ்தூரிரங்கரையும் காமராசரையும் வேறு வேறு நாட்டு நகரங்களாக்கிவிடவில்லையா?

இந்த உண்மையை பார்ப்பன நண்பர்கள் உணர வேண்டும்?

அதையறிந்து தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி விடுதலை இயக்கமான தி. மு. கழகத்தை அழித்துவிட எண்ணினால், அவர்களுக்குச் சொல்கிறேன்— அவர்கள் துக்ககரமான ஏமாற்றத்தைத்தான் சந்திக்க நேரும் என்பதை.

காரிலே பவனி வருபவனைப் பார்த்து, கைவண்டி இழுப்பவன் பொறாமை கொள்வதில் என்ன தவறு? மெருகு குலையாத காரிலே மேனி வாடாது வலம் வருபவன் மீது, கதிரவன் வெப்பத்தால் சூடேறி இருக்கும் கட்டாந்தரையில் கால்களின் கொப்பளம் வெடிக்க கைவண்டி இழுத்து கால் வயிறு கஞ்சிக்கும் கஷ்டப்படுபவன், கோபம் கொள்வதிலே, அவர்களைப் பகைத்துக் கொள்வதிலே தவறென்ன இருக்க முடியாதே? அப்படியானால் காரிலே போகிறவன் குற்றவாளியா எனக் கேட்கலாம். அல்ல. ஆனால், பெரும ஏற்றத்தாழ்வுகளையும், மேடுபள்ளங்களையும் கொண்ட சமுதாய அமைப்பு, பலருக்கு மனதிலே புகைச்சலையும், கண்களிலே கனலையும் புனலையும் உண்டுபண்ணத்தானே செய்யும்.

காரிலே போகிறவன், போகிற போக்கில், தன் வாயில் சுவைக்கிற வெற்றிலை எச்சிலையும் கைவண்டி இழுப்பவன் மீது துப்பிவிட்டுப் போனால், எச்சிலைத் துப்பியவனின் பேரில்தான் பற்கனல் இருக்காதா!

காரிலே போனவன் மந்திரி ஆனாலும், பெரும் ராஜமந்திரி ஆனாலும், மாஜிஸ்திரேட் ஆனாலும், கைவண்டி இழுப்பவன் கவலைப்பட மாட்டான், தன் மீது எச்சிலை உமிழ்ந்தால்.

"புழுவும் போரிடும், பூனையும் தாக்கினால் புலியாகும்" என்று தமிழ் நாட்டில் சொல்வதுண்டு.

அதைப் போன்று இந்த நாட்டில் பலர் புழுவாய்த் துடிக்கின்றனர்.

மாடுபோல் மனம் காணாத பாட்டாளிகள், ஒரு பாவமும் அறியாதவர்கள். அவர்கள் தான் வாழ்வுக்காகத் துடிக்கிறார்கள். வாழ வழியின்றித் தவிக்கிறார்கள். அவர்கள் ஒரு சாதியினர் மட்டும் உல்லாசமாய் உழைக்காமலேயே வாழ்கிறார்கள் என்பதைக் கண்டால் கோபங் கொள்ளாது என்ன செய்ய முடியும்? எனவேதான் நான் சொல்கிறேன் பார்ப்பனர்களின் பகைவர் ஏழை அழும் கண்ணீர் தான். அந்த பகை வளரக் கூடாதென்றால் அதற்கு வழி.........?

வரலாறு படித்தவர்களைக் கேளுங்கள். எனக்கு கிரேக்க வரலாற்றை டி. ஆர். சேஷய்யர் என்பவரும், இந்திய வரலாற்றை சீனிவாச அய்யங்காரும், இங்கிலாந்து வரலாற்றை ஒரு சாஸ்திரியும்தான் கற்றுத் தந்தார்கள். அவர்கள் கற்றுத் தந்த பாடத்தைச் சொல்கிறேன். இங்கிலாந்தில் அய்யர் உண்டா? ஜெர்மனியில் அய்யங்கார் உண்டா? இன்னும் வேறு பல நாடுகளிலும் சர்மாக்களும் செட்டியார்களும், படையாச்சிகளும் உண்டா என்று? அந்தநாடுகளில் எல்லாம் மனிதர்கள்தான் வாழ்கிறார்கள். இங்குதான், இந்திய நாட்டில் தான் சாதிகள் இருக்கின்றன. இந்த சாதிகள் ஒழிக்கப்பட வேண்டாம் என்று எப்படிச் சொல்ல முடியும்? எந்த அறிவைக் கொண்டு, சாதிகள் தொலையவேண்டும் என்னும் நம்மை எதிர்க்கிறார்களோ தெரியவில்லை,

அனந்தாச்சாரி என்று அழைத்துக் கொள்வதற்கு பதில் சாரியைவிட்டுவிட்டு அனந்தன் என்று கூறிக் கொண்டிருந்தால் இன்று பார்ப்பனர்கள் மீது பகை வளர்ந்திருக்குமா?

மடி சஞ்சி பார்ப்பனர்தான் இதை உணரவில்லை என்றால் படித்துப் பட்டம் பெற்று பகட்டாக, போலோ காலர் ஷர்ட்டும், டட்டால் டையும் டுவீட் சூட்டும் அணிந்து அலங்காரமாக சிசர் சிகரெட்டும் பிடிக்கிற பார்ப்பன இளைஞர்களாவது எண்ணிப்பார்க்க வேண்டாமா?

திராவிடர் கழகம் சொல்கிறது, பார்ப்பனர்களை வெளியேற்ற வேண்டும் என்று நாங்கள் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் அடிப்படை ஒன்றுதான். பார்ப்பனர்கள் மாஜி பார்ப்பனர்கள் ஆகிவிட்டால் துரத்தப்படவேண்டியவர்கள் அல்ல என்கிறோம். மாஜியாகிவிட்டால் பார்ப்பனர்களை இந்த நாட்டில் இருந்துத் துரத்தவேண்டும் என்று பேசியார் சொல்வார்?

நான் இப்படிச்சொல்வதைச் சிலர் கபடம் என்கிறார்கள், சிலர், ராஜதந்திரம் என்கிறார்கள். நான் சொல்கிறேன் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க, மேலிருந்து ஏற்றம் ஏறுபவர்களும், கீழிருந்து தண்ணீர் இறைப்பவர்களுமாக இருக்கவேண்டும்.

பெரியார் அவர்கள் 'பார்ப்பனர்களைத் துரத்து' என்று சொல்வதும், நான், அவர்களை 'மாஜியாகிவிடுங்கள்' என்று சொல்வதும் பகுத்தறிவு நீர் இறைக்கத்தான்.

ஆச்சாரியார் மதப் பிரச்சாரம் செய்வது பார்ப்பன மாணவர்களுக்கு வெட்கமாயில்லையா? சர்ச்சில் பைபிள் பற்றியும், ட்ரூமன் பால் எழுதிய சுவிசேஷம் பற்றியுமா பேசிக் கொண்டும், பிரச்சாரம் செய்துகொண்டும் இருக்கிறார்கள்?

குளத்தங்கரையில் உட்கார்ந்து சந்தியா வந்தனம் செய்யும் சாதாரண ஒரு மடி சஞ்சிகைப் பார்ப்பனன் செய்ய வேண்டிய கம்பராமாயணப் பிரசங்கத்தை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த ஆச்சாரியார் செய்கிறாரே, இதை கண்டு படித்த பார்ப்பனர்கள் வெட்கப்பட வேண்டாமா? கம்பராமாயணம், சரியா, தவறா—அது வேறு விஷயம். ஆச்சாரியார் இந்த வேலை செய்யத்தான் தகுதி உடையவரா? கவர்னராய், கவர்னர் ஜெனரலாய், முதன் மந்திரியாய் பதவி வகித்த ஒரு மனிதர் சத்கதா காலட்சேபம் செய்யப் புறப்பட்டிருப்பது நியாயந்தானா? இந்த வேலை செய்பவர்தான் தகுதி உடையவர் ஆச்சாரியார் என்றால், எப்படி பொறுத்துக் கொண்டிருந்தோம் அவர் ஆட்சி பீடத்தில் பல ஆண்டுகள் இருந்ததை?

தட்டானிடம், நகை செய்து தரச் சொல்வோமா? நம் வீட்டுக் கன்றுக் குட்டியைக் கட்டும் இரும்புச் சங்கிலி செய்துதரச் சொல்வோமா? ஆண்டவனைப் பிரார்த்திக்கும்போது பிறவா வரம்தா என்று கேட்பீர்களா? உங்கள் வீட்டு எருமை மாட்டிற்கு பிரசவம் சுகமானதாக இருக்க வேண்டுமெனக் கோருவீர்களா?

ஆச்சாரியார் ஏன் இப்படி மட்டமான பிரச்சார வேலையில் ஈடுபட வேண்டும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான், இதைச் சொல்கிறேன். விற்பனையாகாத சாமானை விலைபோகாத ஆச்சாரியார், ஆளில்லாத மார்க்கெட்டில். அந்தமன நேரத்தில் விற்க முற்படுகிறார்.

நாங்கள், சாதிகளையும் பேதங்களையும் எதிர்க்கிறோம். மதங்களையும் அவைகள் கற்பிக்கும் மடமைக் கருத்துக்களையும், மாச்சரியங்களையும் எதிர்க்கிறோம்.

மதத்தை எதிர்க்கிறோம் என்றால் பார்ப்பனத் தலைவர்களைத்தான் எதிர்க்கிறோம் என்பதல்ல. பார்ப்பனர் அல்லாதராய் இருக்கும் தம்பிரான்களையும் சேர்த்துத்தான், காவியணிந்த கபடர்கள் யாராயிருந்தாலும்தான் எதிர்க்கிறோம் எத்தன் தொழிலைச் செய்ய எண்ணும் எவரையும் எதிர்க்கத் தயங்கமாட்டோம். இந்த பெருந்தன்மை பேரறிவு ஏன் பார்ப்பனர்களுக்கு வரவில்லை?

சமுதாயத்தில் நிலவுகிற சாதிச் சனியன்கள் தொலைய, பார்ப்பனர்கள் என்றாவது வாதாடியது உண்டா?

தி. மு. கழகத்துடன் சேர்ந்து இந்த நற்பணி புரிய ஏன் அவர்கள் வரக்கூடாது? தி மு. கழகம் சொல்கிறது, மாச்சரியமும், மடமை எண்ணங்களும், மதபோதனைகளும், மருட்சியும், மக்களை விட்டு அகலவேண்டுமென்று. இதைத்தான் பார்ப்பன நண்பர்களுக்கு முதல் செய்தியாக—யோசனையாக நான் சொல்ல விரும்புகிறேன். பழமைப் பிடியிலிருந்து மக்கள் விடுபட, பார்ப்பனர்கள் பணி புரிவதற்கு, எங்களுடன் சேர வெட்கமாயிருந்தால் ஏன் தனி மேடை போட்டு பேசக் கூடாது?

மாலடோவின் நடவடிக்கைகளையும், மெண்டஸ் பிரான்சின் ராஜதந்திரத்தையும் பற்றிப் பேசும் பார்ப்பனருக்கு சாதி ஒழிப்பு பற்றிப் பேச நேரமில்லையா என்ன?

(பொதுச் செயலாளர் சொற்பொழிவின் மற்ற பகுதி நாளை வரும்)

பேராசிரியர் பேசுகிறார்!

"வடநாட்டு மொழிகளில் தென்இந்தியர் கொண்டுள்ள ஆர்வத்தைப் போன்று, வடநாட்டவருக்குத் தென்னாட்டு மொழிகளில் ஆர்வம் கிடையாது."

—டாக்டர் ரகுவீரா கூட்டத்தில் பேராசிரியர்: சீனிவாசராகவன்

சென்று வருகிறோம்!

நாடகக் குழுவினருடன் மதுரையிலிருந்து சென்னைக்கு பவனி வந்த நாங்கள் இன்று மதுரைக்கே பயணமாகிறோம். எம்மைப் போற்றிப் புகழ்ந்த தலைவர்களுக்கும், ஆதரவு தந்த சென்னை மக்களுக்கும் வணக்கம். மீண்டும் விரைவிலே சந்திக்கிறோம்.

—கலைத்தூதன்-செல்வா

கழக நாடகத்தைத் தடுக்கக் கலெக்டரிடம் காவடி!

கம்யூனிஸ்டு, காங்கிரஸ், மதவெறியர் முயற்சி தோல்வி!

புதியம்புத்தூர், ஜூலை 24—

இவ்வூர் நாடார், பத்திரகாளியம்மன் கோவில் அருகில் பாண்டியனார் திடலில் வி. வி டி. அரங்கில் 22—7—54-ல் இவ்வூர் கே. வி. கே. சாமி நாடக மன்றத்தாரால் 'அரக்கு மாளிகை' நாடகம் தூத்துக்குடி கவுன்சிலர் இராமலிங்கம் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நாடகத்தை பாண்டியனார் திடலில் நடைபெற விடாமல் தடுக்க, காங்கிரஸ், கம்யூனிஸ்டு, மதவாதிகள் ஒன்றுசேர்ந்து 144 தடை உத்தரவு வாங்க தூத்துக்குடி சப் கலெக்டர் அவர்களிடம் போய் உத்தரவு கேட்க, கலெக்டர் அவர்கள் நேர்மையை விசாரித்து தலைவர் அவர்களையும், பேச இருந்த தோழர் கே. வி. கே. சாமி அவர்களையும் பேசக் கூடாது என்றும், நாடகத்தை மட்டும் நடத்த உத்தரவு கொடுத்தார். நாடகம் மிக சிறப்புற நடைபெற்றது. சுமார் 5 000 மக்கள் கண்டு களித்தனர். (ந-கி)

பாவைக் கூத்து!

"மக்கள் சபையிலும், அகில இந்தியக் காங்கிரஸ் பொதுக் குழுக் கூட்டத்திலும், இந்தி மொழி பேசுவது பழக்கத்திற்கு வந்த பின், அவை, தென்னிந்தியர்களுக்கு, பாவைக் கூத்தாகவே காட்சி தருகின்றன."

—டாக்டர் ரகுவீரா கூட்டத்தில், கே. சீனிவாசன்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (8, ஜீவா நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.